DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.693/2024**

**P.W.3**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | இந்திராராணி |
| Husband Name | : | பாபு |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.

( எதிரி ஆஜர்.)

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது அலங்காநல்லூர் அன்னைவேலு சிட்டி என்ற முகவரியில் வசிக்கிறேன். **அ.சா.1** திருசெல்வராணி மற்றும் **அ.சா.2** உமாராணி ஆகியோர்களை எனக்கு தெரியும். எனது கணவர் மதுரை மாநகராட்சியில் E.B செக்ஷனில் வயர்மெனாக இருக்கிறார். கடந்த 30.06.2023ம் தேதி, சுமார் இரவு 07.15 மணியளவில் நானும், **அ.சா.1** திருசெல்வராணி மற்றும் **அ.சா.2** உமாராணியும் அன்னைவேலு சிட்டி சந்திப்பில் வழக்கமாக பேசிக்கொண்டிருப்போம். ஆஜர் எதிரியும், இன்னொரு நபரும் இருசக்கர வாகனத்தில் இருவரும் கருப்பு கலர் டீசர்ட் அணிந்து எங்கள் தெருவிற்குள் போய் வந்தார்கள். திரும்பி வரும் போது ஆஜர் எதிரி, **அ.சா.1** திருசெல்வராணியின் தங்க தாலி செயினை Activa இருசக்கர வாகனத்தில் இருந்துகொண்டு பறித்து சென்றுவிட்டார். அப்போது, **அ.சா.1** திருசெல்வராணி மயங்கி கீழே விழுந்துவிட்டார், நான் தான் எதிரிகளை பிடிக்க ஓடினேன். அவர்கள் வேகமாக சென்றுவிட்டார்கள். நான் காவல் 100 க்கு போன் செய்தேன்.

பிறகு ஊமெச்சிகுளம் காவல்நிலையத்தில் இருந்து போலீஸார் வந்துவிட்டார்கள். **அ.சா.1** திருசெல்வராணியின் கணவருக்கு நான் தான் போன் செய்தேன். அவர் அங்கிருந்து அரை மணிநேரத்திற்கு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். நாங்கள் அனைவரும் காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தோம்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

அன்னை வேலுச்சிட்டி என்பது சுமார் 50 அடி நீளம் கொண்ட சந்து பகுதி என்றால் சரிதான். நாங்கள் நின்றுகொண்டிருந்த போது அன்னை வேலுச்சிட்டிக்குள் சுமார் 7 அல்லது 8 வாகனங்கள் சென்றது. மேற்படி 7 அல்லது 8 வாகனங்களிலும் யார் சென்றது என்பதை நாங்கள் பார்த்தோம். மேற்படி எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார்கள் என்றால், மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்தார்கள் பின்பு தெற்கு நோக்கி திரும்பி, திரும்ப வரும் போது, **அ.சா.1** திருசெல்வராணியின் செயினை அறுத்துச்சென்றுவிட்டார்கள். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய இருவரும் தலைகவசம் அணிந்திருந்தார்களா என்றால், இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் தான் தலைகவசம் அணிந்திருந்தார். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்று அல்லது பின்னாடி அமர்ந்திருந்தவர் யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தற்போது சாட்சி பின்னால் அமர்ந்திருந்தது ஆஜர் எதிரி என்று சொல்கிறார். நான் போலீஸ் விசாரணையில் முதலில் ஒருவர் தலைகவசம் அணிந்து இருசக்கர வாகனம் ஓட்டி வந்து பின்னால் இருந்த நபர் செயினை அறுத்தார் என்று சொல்லியுள்ளேன். வழக்கு சம்பவம் இரவு 07.30 மணியளவில் நடந்தது இரவு 07.35 மணிக்கு போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள், இரவு 07.40 மணிக்கு நாங்கள் புகார் கொடுத்துவிட்டோம். அந்த புகார் **அ.சா.2** உமாராணி கொடுத்து அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். மறுநாள் காலை **அ.சா.1** திருசெல்வராணி, **அ.சா.2** உமாராணி மற்றும் என்னையும் காவல்நிலையம்

வரச்சொன்னார்கள். அங்கு காவல்நிலையத்தில் நகை இருந்தது, நகையை நாங்கள் பெற்றுக்கொண்டோம். சம்பவம் இடத்தில் வைத்தும் மறுநாள் நாங்கள் காவல்நிலையம் சென்ற போதும், போலீஸார் எங்களை விசாரித்தார்கள். அதன் பிறகு எங்களை விசாரிக்கவில்லை. நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பின் பகுதியில் செயினை இழுத்ததால் **அ.சா.1** க்கு கழுத்து மற்றும் முன்பகுதியில் இரத்த காயம் ஏற்பட்டது. நான் தான் **அ.சா.1** ஐ சிகிச்சைக்கு அழைத்துச்சென்று மருத்துவமனையில் சேர்த்தேன். அவருக்கு சுமார் 3 மணிநேரம் சிகிச்சை அளிக்கப்பட்டது. நான் போலீஸார் விசாரணையிலும் **அ.சா.1** க்கு இரத்த காயம் ஏற்பட்ட விபரத்தை சொல்லியுள்ளேன்.

**மறு விசாரணை –** இல்லை.

S/d - S.John Sundarlal Suresh, B.Sc., M.L.,
IV Additional District and Sessions Judge, Madurai.